T-UN-516

ஸ்ரீ சித்தலிங்காய நம:

பகவான் ஸ்ரீ எடையூர்

# சித்தலிங்கேஸ்வரசுவாமி

அவர்களின்

## ஜீவன சரித்திரம்

ஸ்ரீ எச். ஆர். மஹந்தையா, B.A, (Hons.) LL.B.,

ஜெனரல் செக்ரிடரி

அவர்களால் பிரசுரிக்கப்பட்டது.

5 வது சென்டினரி கொண்டாட்ட கமிட்டி,

18, ஜெயதேவ் ஹாஸ்டல்,

சேஷாத்ரி ரோட், பெங்களூர்-9.

## முன்னுரை

"ஆட்பா லவர்களுக்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில்அள வில்லை கிளக்கவேண்டாம்
கோட்பா லனவும் வினையுங்குறுகாஜீம் எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்கதக்கார்"

ஸ்ரீ சித்தலிங்கேஸ்வர சுவாமிகளின் ஐந்தாம் நூற்றாண்டு விழா திருவண்ணாமலையில் வருகின்ற கார்த்திகைத் திங்களில் நடைபெறவிருக்கின்றது. திருத்தொண்டர் புராணத்தில் கூறப்படுகின்ற அறுபான்மும்மை நாயன்மார்களைப்போன்ற மகான் ஸ்ரீ சித்தலிங்கேஸ்வர சுவாமிகள். பல அற்புதசித்திகளைப் புரிந்து மக்களுக்குக் கடவுள் உண்மையைப் புலப்படுத்தி அவர்களை நல்வழிப்படுத்தியதுமல்லாமல் கடவுளை அடையும் வழிகளையும் அவர்களுக்கு அறிவித்துச் சென்றார்.

பங்களூரில் வசிக்கும் இவ்விழாக் குழுவின் பொதுச் செயலாளர் ஆகிய ஸ்ரீ எச். ஆர். மஹந்தையா அவர்கள் தஞ்சையில் வசிக்கும் என்னுடன் கடிதங்கள் மூலம் தொடர்பு கொண்டு ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த ஸ்ரீ சித்தலிங்கேஸ்வர சுவாமிகளின் சரித்திரச் சுருக்கத்தைத் தமிழில் மொழிபெயர்த்துத் தருமாறு வேண்டினர். சித்தரும் ஞானியுமாகிய ஒரு மகானுடைய வரலாறு ஆகலின் இதனை எனக்கு எதிர்பாராது கிடைத்த பெரும்பேறெனக்கொண்டு மொழிபெயர்த்துள்ளேன். எனினும் சீரிய செந்தமிழ் நடையில் எழுதாமல் எல்லோரும் புரிந்துகொள்ளுமாறு எளிய நடையிலேயே எழுதியுள்ளேன். எனக்கு இச்சீரிய பணியை அளித்த விழாக்குழுவின் பொதுச்செயலாளருக்கு என் நன்றிக்கடன் உரியதாகும். ஆண்டவன் அடியார்கள் எல்லோரும் இதனைப் படித்துப் பயனெய்துமாறு ஸ்ரீ சித்தலிங்கேஸ்வர சுவாமிகள் அருள்புரிவாராக

ந. மு. கோவிந்தராய நாட்டார்
தஞ்சை.
14—11—1970.

ஆசிரியர் :

**பி. சென்ன பசவப்பா, M.A., LL.B.,**

கௌரவச் செயலாளர் : மைசூர் அரசாங்க ஊழியர் சங்கம்.

தமிழில் மொழிபெயர்த்தோர் :

**ந. மு. கோவிந்தராய நாட்டார், B.A., L.T.,**

ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்,

தலைவர் : இராசராச சமயச் சங்கம், தஞ்சாவூர், தமிழ் நாடு.

பதிப்பாளர் :

**எச். ஆர். மகந்தையா, B.A., (HONS.) LL.B.**

ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி.

சித்தலிங்கேஸ்வர சுவாமி ஐந்நூற்றாண்டு விழாவின்
பொதுச்செயலாளர் :

**எடையூர் சித்தலிங்கேஸ்வரர் கோயில் நிர்வாகக்
குழுவின் உதவித்தலைவர்.**

அலுவலகம் :—


18, ஜெயதேவா ஹாஸ்டல்

சேஷாத்திரி சாலை, பெங்களூர்-9.


போன் : 26984

இல்லம் : 8275

**விலை 25 காசுகள்.**



எடையூர் ஸ்ரீ சித்தலிங்கேஸ்வரர் க்ஷேத்திரம் மற்றும் கோபுரம்



நிர்விகல்ப சிவயோக சமாதி

## எடையூர் ஸ்ரீ சித்தலிங்கேஸ்வர சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்.

பழம் பெருமை வாய்ந்த பாரத நாடு சித்தர்களும், ஞானிகளும் தொன்றுதொட்டு நிறைந்துவரும் தேசம். மக்களைத் தீய வழியிலிருந்து திருப்பி நல்வழியில் ஒழுகும் வண்ணம் இத்தகைய பெரியோர்கள் அடிக்கடி நாட்டில் தோற்றம் அளிக்கின்றனர். எடையூர் ஸ்ரீ சித்தலிங்கேஸ்வர சுவாமிகள் பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த சித்தரும் ஞானியுமாவர். மக்கள் அவரை சிவபெருமானின் அவதாரம் என்றே கருதினர். என்றும் அழியாத உண்மைகளாகிய ஞானோபதேசங்களை மக்களிடம் பரப்பிக்கொண்டும் பல சித்திகளைப் புரிந்துகொண்டும் இவர் நாடு முழுவதும் சுற்றி யாத்திரை செய்து வந்தார். இச்சித்திகளைச் செய்தது மக்களை வசப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தினால் அன்று. இறைவன் அருளால் சாதாரணமான மனிதர் ஒருவர் எத்துணை உயர்நிலையை அடைந்து அற்புதங்கள் பலவற்றைச் செய்யக் கூடும் என்பதனைக் காட்டுவதற்கே. உண்மையில் இத்தகைய பெரியோர்கள் சித்திச்செயல்களை வெறுத்தனர். எனினும் மக்களிடம் கடவுள் பக்தி வளரவேண்டுமென்பதற்காகவே இவற்றைச் செய்து காட்டினர்.

பன்னிரெண்டாம் நூற்றாண்டில் பசவேஸ்வரா என்ற மகான் மக்கள் சமுதாயத்தில் அடிப்படையான சீர்திருத்தங்களை உண்டுபண்ணிக் கன்னட மக்களுக்கு ஒரு புது வழியைக் கடைப்பிடிக்கும்படியாகச் செய்தனர். மக்கள் எல்லோரும்

---

* எடையூர் ஒரு முக்கியமான யாத்திரை ஸ்தலம். இது பெங்களூர்—ஹாசன் சாலையில் அமைந்துள்ளது. பெங்களூரிலிருந்து 56 வது மைலில் இருக்கிறது. வரும் பக்தர்களுக்கு சாப்பாடும் தங்க வசதிகளும் உள்ளன.

சமம் என்று அவர் கருதினபடியால் சமூகத்தில் காணப்பட்ட உயர்வு தாழ்வுகளைப் போக்கி சமூகத்தின் அடிப்படை அமைப்பையே மாற்றுவதற்கு மிகப்பெரிய முயற்சி செய்தார். தாழ்த்தப்பட்ட வகுப்பினரையும் பெண் மக்களையும் உயர் நிலைக்குக் கொண்டுவருவதில் போற்றத்தக்க வெற்றியும் அடைந்தார். பல நூற்றுண்டுகளாகக் கடவுள் வழிபாட்டுச் சுதந்திரம் இல்லாதிருந்த பெண் மக்களுக்கு அச்சுதந்தரத்தைப் பெறும்படியாகச் செய்தார். எளிய வாழ்க்கையும் உயர்ந்த எண்ணமுமே அவர் உபதேசங்களின் அடிப்படை உண்மை யாகவிருந்தது. சாதாரண மக்கள் புரிந்துகொண்டு கடைத் தேறுவதற்காக எளிய கன்னட மொழியில் அரிய உண்மைகள் அடங்கிய பாடல்களை அவர் இயற்றினர். சுருங்கக் கூறில் இவருடைய பாடல்களும் இவரையொத்த பெரியோர்களாகிய, சன்னபஸவா, அல்லம பிரபு, அக்க மகாதேவி ஆகியோர் பாடிய பாடல்களும் அக்காலத்தில் கன்னட நாடெங்கும் பரவின. இதனுல் மக்கள் மனோநிலையில் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது. இலக்ஷக்கணக்கான மக்கள் இவர் களுடைய போதனைகளைப் பின்பற்றினர். எனினும் இந்நிலை நீடிக்கவில்லை. ஏனெனில் சமூகம், அரசியல், சுயநலம் போன்ற காரணங்களால் மக்கள் தங்கள் பழைய நிலைக்கே திரும்பினர்.

பதினைந்தாம் நூற்றுண்டின் இந்நிலையில்தான் ஸ்ரீ சித்த லிங்கேஸ்வர சுவாமிகள் சமயப்பிரசார வேலை தொடங்கியது. பசவேஸ்வரரும் அவர்காலத்தவராய அல்லம பிரபுவும் செய்துவந்த பிரசாரம் இளமை நலம்பெற்று மீண்டுவந்த தெனவே இதனை மக்கள் கருதலாயினர். அல்லம பிரபு "அனுபவ மண்டபம்" என்னும் பெயருடைய புகழ்வாய்ந்த இலக்கிய சங்கத்தின் தலைவராயிருந்தார். இந்தியாவின் பல பாகங்களிலிருந்து அறிஞர்களும், ஞானிகளும் இச்சங்கத்திற்கு வந்து இலக்கிய சம்பந்தமாகவும் ஆன்மார்த்த விஷயங்கள் குறித்தும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவது வழக்கம். ஆனல்

ஸ்ரீ சித்தலிங்கேஸ்வர சுவாமிகள் ஒரே இடத்தில் நிலையாகத் தங்காமல் நாடு முழுதும் சுற்றிவந்து சமயப்பிரசாரம் செய்து வந்தார். இவருடன் இவருடைய தொண்டர்களாகிய எழு நூறு விரக்தர்களும், மூவாயிரம் சரமூர்த்திகளும் வந்தனர். இவ்வாறு, தன்னை அறிவதற்கும், கடவுளை அடைவதற்கும் உரிய ஆறுபடிகளாகிய சோபான முறைக்கொள்கைகளை சித்தலிங்கேஸ்வர சுவாமிகள் மக்களிடைப் பரப்பி வந்தார்.

மைசூர் மாவட்டத்தில், சாமராஜ நகர் வட்டத்திலுள்ள ஹரதன ஹள்ளி என்ற ஊரில் சுவாமிகள் பிறந்தார். இவருடைய பெற்றோர்களாகிய மல்லிகார்ச்சுனர்க்கும், ஞானம்பிகைக்கும் நீண்ட காலமாக மகப்பேறு கிட்டவில்லை. இறுதியில் இவர்களுடைய குல குருவாகிய கோசால சென்னபசவேஸ்வரர் ஆசீர்வாதத்தால் ஸ்ரீ சித்தலிங்கேஸ்வரர் பிறந்தார். காலக்கிரமத்தில் சித்தலிங்கேஸ்வரர் குல குருவினிடம் தீட்சை பெற்று அவரிடம் பக்தி சிரத்தையுடன் ஒழுகித் தொண்டு செய்து வந்தார். விரைவில் குருவானவர் தம் மாணாக்கரிடம் தெய்வ ஒளி பிரகாசிப்பதனைக் கண்டுகொண்டார்.

ஒரு நாள் குரு இலிங்க பூசை செய்துகொண்டிருந்த அறையில் எரிந்துகொண்டிருந்த எண்ணெய் விளக்கு அணையுந் தறுவாயில் இருப்பதனை சுவாமிகள் கண்டார். விளக்கில் எண்ணெய் இல்லாததைக் கண்ட சுவாமிகள் உடனே தண்ணீர் கொண்டுவந்து ஊற்றினார். விளக்கு பிரகாசமாக எரியத்தொடங்கிற்று. குரு இதனைக் கண்டார். மாணாக்கரிடம் சிவ சொரூபத்தைக் கண்டார். ஆதலின் உலக நன்மையைக் கருதி மாணாக்கராகிய சுவாமிகளைத் தம்மிடமிருந்து பிரிந்துபோகும்படியாக ஆசீர்வாதம் செய்து வழியனுப்பிவைத்தார்.

இவ்வாறு சித்தலிங்கேஸ்வரர் தம் தொண்டர்களாகிய விரக்தர்களுடனும், சரமூர்த்திகளுடனும் யாத்திரை செய்யப்

புறப்பட்டார். சௌராஷ்ட்டிரா, கொல்லிப்பாக்கு கேதரிநாத், ஹம்பி, சிவகங்கா, இராமேஸ்வரம், ஸ்ரீரங்கம், காஞ்சி, சிதம்பரம், கும்பகோணம், காளத்தி ஆகிய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு இறுதியில் புகழ்வாய்ந்த ஸ்தலமாகிய திருவண்ணுமலைக்கு சுவாமிகள் வந்து சேர்ந்தார். திருவண்ணு மலை இயற்கை எழில் நிரம்பியது. சித்தர்களுக்கும், ஞானி களுக்கும் உறைவிடமாக அமைந்தது. அருணுசலேஸ்வரர் கோயிலும், இடமகன்ற சுற்று மாளிகைகளுடனும், கூடங்க ளுடனும், கோட்டைகளுடனும் கூடி மிகுந்த அழகு பொருந்திய தோற்றம் அளித்தது. இத்தகைய காரணங் களால் இத்தலம் சுவாமிகளின் மனதை மிகவும் கவர்ந்தது.

ஒரு நாள் சுவாமிகள் சிவ பூசையை முடித்துக்கொண்டு கோயிலில் சயனம் கொண்டார். நள்ளிரவில் அருணுசலேஸ் வரர் ஒரு பிச்சைக்கார சன்னியாசி வேஷங்கொண்டு அவர் முன் தோன்றி ஆன்மார்த்த விஷயமாய் அவருடன் ஒரு வாக்கு வாதம் தொடங்கினுர். சுவாமிகளின் வைராக்கியத்தையும் உண்மை ஞானத்தையும் அறிந்த ஆண்டவன் தான் அணிந் திருந்த முத்துமாலையைக் கழற்றி அவர் கழுத்தில் அணிவித்து மறைந்தார். காலையில் எழுந்த அவருடைய தொண்டர்கள் சுவாமிகளின் கழுத்தில் மின்னுகின்ற முத்து மாலையைக்கண்டு ஆச்சரியம் உற்றனர். ஆண்டவன் கழுத்தில் அணியப் பட்டிருந்த முத்து மாலையைக் காணுத கோயில் குருக்கள்மார் மிகுந்த பதைபதைப்புடன் பலவிடங்களில் அதனைத் தேடிப் பார்த்தனர். மாலையைக் காணவில்லை. இறுதியில் சுவாமி களின் கழுத்தில் மாலையைக் கண்டனர், கலக்கமுற்றனர். இறுகப் பூட்டப்பட்டிருந்த மூலஸ்தான அறையில் ஒரு சாதாரண மனிதன் எவ்வாறு நுழைந்திருக்கக் கூடுமெனப் பலவாறு ஆராய்ச்சி செய்து பார்த்தனர். ஒன்றும் புரியவில்லை. உடனே தம் அரசனிடம் செய்தியைத் தெரிவித்தனர். அரசன் காவலாளர்களுடன் சென்று சுவாமிகளைக் கைது செய்தான். சுவாமிகள் நடந்ததை விளக்கிக் கூறினர். அரசன் நம்பாமல்

மாலையை ஆண்டவனிடம் ஒப்படைக்குமாறு கூறினன். அவ்வாறே மாலை இறைவன் கழுத்தில் அணியப்பெற்றது. ஆனல் மீண்டும் அம்மாலை சுவாமிகளின் கழுத்திற்கு வந்து சேர்ந்தது. இறுதியில் இறைவன் அரசனுக்கும், குடிபடைகளுக்கும் காட்சியளித்து மறைந்தருளினன். அரசனும் ஏனேரும் சுவாமிகளின் காலில் விழுந்து வணங்கினர். பிறகு அரசனும், குடிகளும் சுவாமிகளிடம் தீட்சைபெற்று வீர சைவர்களாயினர். சில நாட்கள் திருவண்ணுமலையில் தங்கி அங்குள்ள இரு சைவமடங்களைப் பார்வையிட்டு மீண்டும் சுவாமிகள் யாத்திரை தொடங்கினர்.

செல்லும் வழிகளில் சுவாமிகள் பல அற்புதங்களை நிகழ்த்திச் சென்றுர். மதம் பிடித்துத் தொடர்ந்து வந்த ஒரு யானையிடமிருந்து ஒரு பெண்மணியைக் காப்பாற்றினர். சண்டையிட்டுக் கொண்டிருந்த இரு முஸ்லீம் அரச குமாரர்களில் தோற்றவன் ஓடி வந்து சுவாமிகளிடம் சரண்புகுந்தான். அப்போது சுவாமிகள் கோதாவரி ஆற்றங்கரையில் யோக நித்திரையில் இருந்தார். வென்றவன் பின்தொடர்ந்து வந்து தன் பகைவனை வெட்டி வீழ்த்தினன். சுவாமிகள் யோக நித்திரையிலிருந்து எழுந்தார். இறந்த அரசகுமாரனுடைய வெட்டப்பட்ட கை கால்கள் ஒன்று சேர்ந்தன. விழித்தெழுந்தவன்போல் அவன் உயிர்பெற்று எழுந்தான். இந்த அதிசயத்தைக் கண்ட மற்ற அரசகுமாரன் தன் பகைமையை மறந்து அவனுடைய நண்பனுனன். இருவரும் ஒன்றுபட்டு வாழ்ந்தனர்.

இதன் பிறகு சுவாமிகள் கோகர்ணத்தில் உள்ள மகர் பலீஸ்வரர் கோயிலுக்குச் சென்றனர். இக்கோயிலில் உள்ள இலிங்கம் ஓர் ஊற்றிலிருந்து வரும் தண்ணீரால் சூழப்பட்டிருந்தது. சுவாமிகள் இலிங்கத்தின்மேல் காலை வைத்து தியானத்தில் அமர்ந்தார். சிறிது நேரத்தில் அங்கு வந்த குருக்கள்மார் கோபங்கொண்டு அவரை வெளியே அடித்துத்

துரத்தினர். பின்னர் இலிங்கத்திற்குப் பிராயச்சித்த பூசை நடத்தினர். சுவாமிகள் வெளியே ஒரு மரத்தடியில் தியானத்தில் அமர்ந்திருந்தார். கோயிலுக்குள் இலிங்கத்தைச் சூழ்ந்திருந்த தண்ணீர் வற்றிவிட்டது. மூலஸ்தானம் வரண்டிருப்பதனைக்கண்ட குருக்கள்மார் ஆத்திரமடைந்தனர். ஆனால் ஆண்டவன் அவர்களுக்கு சுவாமிகளுடைய பெருமையைப் புலப்படுத்தியருளினர். ஆதலின் சுவாமிகளின் காலில் விழுந்து வணங்கி அவரைக் கோயிலுக்குள் அழைத்துச் சென்றனர். சுவாமிகள் மீண்டும் இலிங்கத்தின்மேல் காலை வைத்தார். வறண்டிருந்த ஊற்று பெருக்கெடுத்து ஓடலாயிற்று. குருக்கள்மார் சுவாமிகளிடம் தீட்சைபெற்று வீரசைவர்களாயினர்.

தும்கூர் பக்கத்திலுள்ள சித்தகங்கா க்ஷேத்திரம் புகழ் வாய்ந்த யாத்திரை ஸ்தலம். ஒருசமயம் இந்த ஸ்தலம் தண்ணீரில்லாமல் வரண்டு கிடந்தது. மக்கள் வாடி வதங்கினர். சுவாமிகள் அருகில் உள்ள ஒரு குன்றின்மேல் ஏறினர். திடீரென அக்குன்றின்மேல் ஓர் ஊற்றுத் தோன்றியது. அதிலிருந்து தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த ஊற்றுக்கு சித்தகங்கை என்று பெயர் உண்டாயிற்று. இத்தலத்தில் சுவாமிகள் பெயரால் ஒரு கோயிலும் உண்டாயிற்று.

தீராத நோயால் துன்புற்ற தமிழ் நாட்டைச் சேர்ந்த வீரண்ணரியா என்பார் சுவாமிகளுடைய பெருமையைக் கேள்வியுற்று அவரைத் தரிசிக்கும்பொருட்டு சித்தகங்கா க்ஷேத்திரம் வந்தடைந்தார். சுவாமிகள்மேல் பல தோத்திரப் பாடல்கள் பாடினர். சுவாமிகள் அவரை சித்தகங்கையில் முழுகும்படியாகச் செய்தார். இதனல் அவருடைய தீராத பிணி தீர்ந்தது. இதனல் அவர் பரவசமுற்று சுவாமிகள்மேல் மேலும் பல பாடல்கள் பாடினர். சுவாமிகளுடைய அடியார்களுக்கு இத்தமிழ்ப் பாடல்கள் விளங்காமையால் சுவாமிகள் தமது அநுக்கிரகத்தால் அவரைத் தூய கன்னட மொழியில்

பாடும்படியாகச் செய்தார். அடியார்கள் எல்லோரும் ஆச்சரிய மடைந்து சுவாமிகளைப் போற்றிப் புகழலானூர்.

பின்னர் சுவாமிகள் நாகினி ஆற்றங்கரையில் எடையூர் பக்கத்தில் உள்ள கக்கரே என்ற ஊருக்குச் சென்றூர். நம்பெண்ணு என்ற பக்தரும், கிரிகௌடா என்பவரும் சுவாமி களைத் தங்கள் ஊருக்கு வரும்படியாக அழைத்திருந்தனர். நம்பெண்ணு சுவாமிகளைத் தம்வீட்டிற்கு வந்து பூசை செய்யும் படியாக வேண்டினர். ஆனுல் சுவாமிகள் ஊரின் பக்கத்தில் உள்ள ஒரு தோட்டத்தில் சமாதி நிலையில் அமர்ந்திருந்தனர். அப்பொழுது மலை ஜாதியினர் இவ்வூரின்மேல் படையெடுத்து வந்து முற்றுகையிட்டுச் சூறையாடினர். ஊர்வாசிகள் அஞ்சி ஊரைவிட்டு ஓடிவிட்டனர். சுவாமிகள் யோகநிலையிலேயே அமர்ந்திருந்தார்.

பன்னிரண்டு ஆண்டுகள் கடந்தன. சுவாமிகளைச் சுற்றி ஒரு பெரிய கறையான் புற்று உண்டாகிவிட்டது. இதனைச் சுற்றி பாம்புகளும், வேறு விஷ ஜந்துக்களும் உலாவத் தொடங்கின. இந்நிலையில் நம்பெண்ணுவின் பசுக்களில் ஒன்று மேயச் செல்கையில் மந்தையிலிருந்து பிரிந்துசென்று அப் புற்றின்மேல் பாலைச்சொரிந்து வரலாயிற்று. மாலை நேரங்களில் மட்டுமே அப்பசுவிடம் பால் சுரக்காமையைக்கண்டு அப் பசுவைத் தொடர்ந்து கவனிக்கவும், உண்மை கண்டுபிடிக்கப் பட்டது. நம்பெண்ணுவின் வீட்டிற்குச் சுவாமிகளைப் பூசைக்கு அழைத்த நாளிலிருந்தே அப்பசு சுவாமிகள் சமாதியில் ஆழ்ந் திருந்த இடத்தில் உண்டாகியிருந்த கறையான் புற்றின்மேல் பாலைச்சொரிந்து வந்துகொண்டிருந்ததென்பதை அவ்வூரினர் உணர்ந்தனர். தன்னிச்சையில்லாமல் சமாதியில் ஈடுபடும் வழக்கமுடைய சுவாமிகளின் ஆன்மிகச் சிறப்பினை இச்சம்பவம் நன்கு விளக்குகின்றது.

இந்நிலையில் ஊர் மக்கள் பலர் ஒன்று சேர்ந்து கறையான் புற்றுக்குச் சென்று பல நாட்கள் காத்திருந்து சுவாமிகளை


யோக நிலையிலிருந்து எழுப்பிவிட்டனர். சுவாமிகள் நம்பெண்ணுவின் வீட்டிற்குச்சென்று பூசை செய்வதாகக் கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்ற அவர் வீட்டுக்குச் சென்றுர்.

எடையூருக்கு அருகிலுள்ள கதம்பா ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் சித்தர் மடத்திற்கு சுவாமிகள் வந்தார். அங்கு பட்டத்தேவராக இருந்த சுவாமிகளின் மாணவரான சிட்டிகதேவர் என்பவர் வசித்து வந்தார். சுவாமிகள், போல பசவேஸ்வரர், சிட்டிகதேவர் மற்றுமுள்ள அடியார் களுக்கு சட்தல சித்தாந்தத்தை உபதேசித்தருளினுர். அவர் போல பசவேஸ்வரரைத் தமக்குப் பின் பீடத்தில் அமர்ந்திருக் கும்படியாகச் செய்தனர். தம் பெற்றேர்களின் விருப்பத் தின்படி சிட்டிகதேவர் இப்பொழுதுள்ள மடத்தைக் கட்டினர். தம்முடைய அவதார நோக்கத்தைப் பூர்த்திசெய்த பின்னர் சுவாமிகள் தம் அடியாரிடம் விடை பெற்றுக்கொண்டு நிர்வி கற்ப சிவயோக சமாதியில் (ஜீவ சமாதி) அமர்ந்துவிட்டனர்.

சிட்டிகதேவர் அவ்வாலயத்திற்குவரும் யாத்திரிகர்களுக்குப் பசிப்பிணி அறுக்கும் அன்னதானத்திற்கு ஏற்பாடுசெய்தார்.

சுவாமிகள் நிர்விகற்ப சிவயோக சமாதியில் என்ஞான்றும் அமர்ந்திருப்பதால் எடையூர் புகழ்வாய்ந்த புண்ணிய ஸ்தலமாக விளங்கிவருகிறது. இத்தலத்திற்குச் செல்பவர் யாவரும் சுவாமிகளின் யோகநிலையை உணர்ந்து பரவசமடை யாமலும், எங்கும் ஊடுருவி நிற்கும் அவ்யோக நிலையின் முன்னிலையில் தம்மைத் தூய்மைசெய்து கொள்ளாமலும் இருக்கமுடியாது. அவ்வாறு செல்பவர்களிடம் அந்நிலை ஒரு விழுமிய மாறுதலை உண்டாக்கி வாழ்க்கையின் இறுதிக் குறிக்கோளாகவும், மக்களின் உன்னத இலட்சியமாகவும் உள்ள பேரானந்தப் பெருவாழ்வுக்கு அவர்களை இட்டுச்சென்று கொண்டிருக்கிறது.

# Master Plan (Ist Stage) for Yadeyur Kshetra




V. B. Soobiah & Sons, Bangalore-2

(1) The Shrine (2) Flower Garden (3) Sri Rambhapuri Mutt (4) Kitchen (5) Dasoha (Feeding Hall) (6) Mutt (7) Canteen (8) Bus–stand (9-10) Space Reserved for Buildings by Donors (11) Choultry (12) Kalyan Mantap (13) Rest House (14) Post Office (15) Hostel (16) Police Station (17) Vidya Peeta (Educational Institute) (18) Veterinary Hospital (19) Market (20) Lake (Kulam) (21) Car Mantap (22) Pump House (23) Water Tank (24 Resarved for Improvements (25) Well.